www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination – 2021

FWC

கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

Two Hours
Gr -13 (2021)

49 T I

### பகுதி – I

❖ **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்து, புள்ளித்தாளில் அதன் இலக்கத்தை இடுக.**

01. நைல்நதி நாகரிகம் எந்த நதிக்கரையோரத்தில் அமைந்துள்ளது?
 1) யூப்பிரடிஸ் - தைக்கிறீஸ் 2) யார்மூக் 3) ஜோர்தான்
 4) நைல் 5) சீரட்

02. அரமேய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருவிவிலியம் எவ்வாறு அழைக்கப்பட்டது.
 1) தார்கும் (Targum) 2) செப்துவாஜிந்து 3) வுல்காத்தா (Vulgate)
 4) கொய்னே 5) எழுபதின்மர் நூல்கள்

03. முதன்முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட மூன்று பழைய ஏற்பாட்டு நூல்களாவன.
 1) சாலமோனின் ஞானம், 1 ஆம் மக்கபேயர், 2 ஆம் மக்கபேயர்.
 2) ரூத், யோபு, சபை உரையாளர்.
 3) 1 குறிப்பேடு, 2 குறிப்பேடு, யோபு.
 4) 1 மக்கபேயர், 2 மக்கபேயர், சபை உரையாளன்.
 5) 1 ம் குறிப்பேடு, 2 ம் குறிப்பேடு, மீக்கா.

04. பாபிலோனியர் அடிமைத்தனத்திலிருந்து யூதர்களை விடுவித்த அரசன் யார்?
 1) தாரியூஸ் 2) நெபுகக்நேசர் 3) சைரூஸ்
 4) செதேக்கியா 5) நெகேமியா

05. தாவீது அரசரின் காலத்தில் ஒன்றாக இணைந்திருந்த இஸ்ரயேல் நாடு எந்த அரசன் காலத்தில் பிளவுற்றது?
 1) சாலமோன் 2) ஜோசியா 3) ரெகபோவாம்
 4) ஜெரோபோவாம் 5) செதேக்கியா

06. வுல்கத்தா' இலத்தீன் மொழிபெயர்ப்பு பைபிளை வழிபாட்டிற்கு ஏற்றதாக அங்கீகரித்த பொதுச்சங்கம்.
 1) நிசேயா பொதுச்சங்கம் 2) கல்சடோன் பொதுச்சங்கம்
 3) எபேசு பொதுச்சங்கம் 4) திரிதெந்தின் பொதுச்சங்கம்
 5) முதலாம் வத்திக்கான் சங்கம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

07. இயேசுவின் காலத்தில் பாலஸ்தீன் சமூகத்தில் தாழ்ந்த வகுப்பினராகக் கொள்ளப்பட்ட இரு பிரிவினர்.
1) சதுசேயரும் பரிசேயரும்
2) வரிவசூலிப்பவரும் சமாரியரும்
3) சமாரியர்களும் இடையர்களும்
4) இடையர்களும் தீவிரவாதிகளும்
5) தலைமை குருக்களும் வரி வசூலிப்போரும்

08. இறையரசிற்காக வாழ்ந்த இயேசுவின் வாழ்வு மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்துவது.
1) பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு
2) பாடுகள், மரணம், உயிர்ப்பு
3) பிறப்பு, திருமுழுக்கு, மரணம்
4) பணிவாழ்வு, பாடுகள், மரணம்
5) பாடுகள், மரணம், விண்ணேற்பு

09. இஸ்ரயேலின் நீதித்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பணி அல்லாதது.
1) சமூகத்தில் ஒழுங்கினை நிலைநாட்டல்.
2) முரண்பாடுகளை தீர்த்தல்.
3) அந்நிய படையெடுப்புக்களிலிருந்து விடுவித்தல்.
4) உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாய் இருக்க ஊக்கமளித்தல்.
5) எருசலேம் ஆலயத்திற்கு சென்று பாஸ்கா விழாவினைக் கொண்டாட ஊக்கமளித்தல்.

10. எஸ்ரா, நெகேமியா சிறப்புற்றிருந்த காலம்.
1) பாரசீகர்களின் ஆட்சிக்காலம்
2) தாவீது மன்னனின் ஆட்சிக்காலம்
3) அடிமை வாழ்வுக்காலம்
4) சாலமோன் மன்னனின் ஆட்சிக்காலம்
5) கிரேக்கர்களின் ஆட்சிக்காலம்

11. எருசலேம் ஆலயத்தின் தெற்கு நுழைவாயில்களாகிய சுரங்க வழியாக உள்ளே நுழைந்தால் முதலில் இருப்பது.
1) அரச மண்டபம்
2) புற இனத்தார் முற்றம்
3) கல்மேடை
4) சாலமோன் மண்டபம்
5) பேச்சுமேடை

12. வட அரசில் இறைவாக்குரைத்த இறைவாக்கினர் முறையே.
1) எசாயா, எலியா, எரேமியா
2) எலியா, எலிசேயு, ஆமோஸ்
3) எசாயா, மீக்காயா, ஆமோஸ்
4) ஆமோஸ், எலிசா, எசாயா
5) எலிசா, எலிசேயு, மீக்காயா

13. அம் - ஹ - அரஸ் என அழைக்கப்பட்டவர்கள்.
1) அடிமைகள்
2) சமாரியர்
3) பாவிகள்
4) ஏழைகள்
5) வரிதண்டுவோர்

14. பெரிய ஏரோது மன்னன் ஆட்சியின் பின்னர் யூதாவை ஆண்ட அர்ச்கெலா மன்னன் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம்.
1) அவனது சுகயீனம்.
2) உரோமையர்களை எதிர்த்து கிரேக்கர்களுக்கு ஆதரவு வழங்கியமை.
3) அவனது கொடுங்கோல் ஆட்சி பற்றி யூதர்களால் உரோமைக்கு புகார் செய்யப்பட்டமை.
4) எருசலேமில் அந்நிய தெய்வங்களை வழிபட்டமையோடு, மக்களையும் வழிபடத் தூண்டியமை.
5) திருமுழுக்கு யோவானுக்கு எதிராக செயற்பட்டமை.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

15. திருமணம் பற்றி இயேசுவின் காலத்தில் நிலவிய இக்கூற்றுக்களை கருத்திற்கொள்க.

A – ஒரு யூத ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வாழ்வே சிறந்த இலட்சியம் என யூதர்கள் கருதினர்.

B – ஆண் 15 வயதிலும் பெண் 12 வயதிலும் திருமணம் செய்ய அனுமதி இருந்தது.

C – திருமண ஒப்பந்தம் ஆரால் என அழைக்கப்படும்.

D – மணமகன் பெண்ணின் தந்தைக்கு கொடுக்கும் நன்கொடை மோகர் எனப்படும்.

E – திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு திருமண ஆடை வழங்கப்படும்.

இவற்றுள் சரியான கூற்று.

1. ABC 2) ACE 3) ADE 4) BDE 5) CDE

16. "ஹனுக்கா" என்பதன் பொருள்.

1) புளியாத அப்பத்திரு விழா 2) ஆலய அர்ப்பண விழா 3) கூடாரத்திருவிழா
4) பாவக்கழுவாய்ப்பலி விழா 5) பாஸ்காத்திருவிழா

17. யூதர்கள் பாஸ்காத் திருவிழாவைக் கொண்டாடிய காலப்பகுதி.

1) பங்குனி – சித்திரை 2) புரட்டாதி – ஐப்பசி 3) கார்த்திகை – மார்கழி
4) சித்திரை – வைகாசி 5) தை – மாசி

18. "பரபோல்" என்பதன் பொருள்.

1) பழமொழி 2) நொடி 3) ஒப்புமை
4) உவமை 5) உருவகம்

19. யோவான் நற்செய்தியின்படி இயேசுவின் மரணத்திற்கு பொறுப்பானவர்கள்.

1) உரோமையர்கள் 2) செலுட்ஸ் 3) பரிசேயர்கள்
4) எசெனியர்கள் 5) யூதர்கள்

20. எருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான முக்கிய காரணம்.

1) கிரேக்க மொழியில் வழிபாடு நிறைவேற்றப்பட்டமை.
2) ஓய்வுநாளில் நோன்பிருத்தல் பற்றிய தேடியாய்தல்.
3) யூதரல்லாத கிறிஸ்தவர்கள் யூதசட்டத்தை கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தப்பட்டமை.
4) இறந்தோரின் உயிர்ப்புக் குறித்து பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவியமை.
5) போலி இறைவாக்கினர் காணப்பட்டமை.

21. இங்கு பின்வருவனவற்றுள் அந்தியோக்கிய கல்விகூடம் பற்றிய சரியான கூற்று யாது?

1) இயேசுவின் மனித இயல்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு பிளேற்றோவின் மெய்யியல் கொள்கை வலியுறுத்தப்பட்டது.
2) இயேசுவின் தெய்வீக இயல்பு வலியுறுத்தப்பட்டதோடு அரிஸ்ரோட்டிலின் மெய்யியல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது.
3) திருவிவிலியத்தை விளக்க நேர்பொருள் உட்கருத்து பின்பற்றப்பட்டது.
4) திருவிவிலியத்திற்கு விளக்கம் கொடுக்க உருவக முறை பயன்படுத்தப்பட்டது.
5) இயேசுவின் இறை இயல்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.



agaram.lk

www.agaram.lk

| A<br>ஆன்மீக வாழ்வின் இரகசியம் | B<br>அப்போலொஜியா | C<br>திரைபோவுடன் உரையாடல் |
|---|---|---|
| D<br>இலத்தீன் மொழியின் தந்தை | E<br>பேதக மறுப்பு | F<br>திருத்தூதரின் போதனையின் நிரூபணம் |

22. புனித ஜஸ்ரினால் எழுதப்பட்ட நூல்கள்.
1) A, B 2) A, C 3) B, C 4) C, D 5) E, F

23. புனித இரனேயுஸினால் எழுதப்பட்ட நூற்தொகுதி.
1) E, F 2) A, E 3) B, E 4) C, F 5) D, E

24. பின்வருவனவற்றுள் பேரரசர் டயக்லிஸேசியன் (10ம் கலாபனை) தொடர்புடைய நிகழ்வுகள்.
A – உரோமை நகருக்கு தீ வைத்தான்.
B – மறை சாட்சிகளாக புனித தார்சியுஸ், புனித தமியான் காணப்படுகின்றனர்.
C – மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டார்கள்.
D – இரும்புக் கட்டிலில் இடப்பட்டு சுடப்பட்டார்கள்.
E – உடல்கள் குறடுகளால் கிழிக்கப்பட்டன.
1) A B C 2) A B D 3) B C D 4) B D E 5) C D E

25. பின்வருவனவற்றுள் அலெக்சாந்திரிய சிந்தனைக்கூடம் பற்றிய சரியான கூற்று யாது?
1) பசில் எனும் குரு இதனை ஆரம்பித்தார்.
2) கி.பி 5ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
3) பிலோ என்பவர் இதன் தலைவராக விளங்கினார்.
4) புனித அம்புரோசியர் இதன் மாணவராவார்.
5) 'இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம்' அதிகளவில் வலியுறுத்தப்பட்டது.

26. கிறிஸ்தவ துறவற வாழ்வு ஆரம்பித்த இரண்டு நாடுகளும் யாவை?
1) எகிப்து, சிரியா 2) சிரியா, பாலஸ்தீனம் 3) எகிப்து, மசதோனியா
4) பாலஸ்தீனம், பாரசீகம் 5) சிரியா, கொன்ஸ்தாந்திநோபிள்

27. இஸ்ரயேலில் முடியாட்சி தோன்றியமைக்கான காரணம் அல்லாதது.
1) நீதித்தலைவர்களின் செயற்திறன் அற்ற தன்மை.
2) ஆலய வழிபாட்டு மரபு மேற்பார்வை செய்யப்பட்டமை.
3) தேசிய அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டமை.
4) ஆயுதப் படையினருக்குத் தலைமைத்துவம் வழங்கப்பட்டமை.
5) சூழவுள்ள அனைத்து நாடுகளும் அரசர்களால் ஆளப்பட்டமை.

28. திருச்சபையில் முதல் மூன்று நூற்றாண்டுகளும் வீரவரலாற்றுக் காலம் என கொள்ளப்படுவதற்கான முக்கிய காரணம்.
1) பத்திற்கும் அதிகமான உரோமைப் பேரரசர்களின் கலாபனைகளை எதிர்கொண்டமை.
2) உரோமைக் கலாபனைகளைத் தொடர்ந்து யூத கலாபனைகள் இடம்பெற்றமை.
3) வழிபாடுகள் தடை செய்யப்பட்டு கிறிஸ்தவர்களின் உடமைகள் பறிமுதல் செய்யப்பட்டும் மக்கள் அஞ்சாமை.
4) பல கலாபனைகளுக்கு முகம் கொடுத்தபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க விளக்கங்கள் அளிக்கப்பட்டமை.
5) பல கலாபனைகளுக்கு மத்தியிலும் திருச்சபை வேகமாக பரவியமை.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

29. ஏழை எளிய மக்களை இயேசுவின்பால் ஈர்த்த இயேசுவின் முக்கிய செயல்.
   1) உவமைகள் 2) போதனைகள் 3) புதுமைகள்
   4) விளக்கங்கள் 5) எச்சரிக்கைகள்

30. பன்னிரு சீடர்களுடன் கடுகுமணிபோல் ஆரம்பித்த திருச்சபை திக்கெட்டும் பரவி வளர்ந்தது. அதற்கான காரணமாய் கருதப்படுவது.
   1) போலிப்போதகர்களின் போதனைகள்.
   2) பேதுரு மேற்கொண்ட 2 வேதபோதக மறைப்பயணங்கள்.
   3) பவுல் ஸ்தாபித்த சபைகள்.
   4) உலகம் முடியும் மட்டும் நான் உங்களோடு இருப்பேன் என்ற கிறிஸ்துவின் பிரசன்னமும் அருளும்.
   5) இறைவன் பவுலிடம் ஒப்படைத்த பணி

31. சிலுவைப்போர் உண்டானதிற்கான பிரதான காரணம்.
   1) புனித நாட்டை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க.
   2) இஸ்லாமிய சக்தியினை தோற்கடிக்க.
   3) ஸ்பெயின் நாட்டை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க.
   4) முஸ்லிம் படையெடுப்பிலிருந்து ஐரோப்பாவை பாதுகாக்க.
   5) துருக்கிக்கும் பிரான்சிற்கும் இடையில் காணப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக.

32. பவுலின் மறைபோதகப் பயணங்களின் போது ஒழுக்கக் கேடுகளும் குறைகளும் மலிந்து சிற்றின்பக் கேளிக்கைகளின் நகரமாக காட்சி கொடுத்த இடம்.
   1) தெசலோனிக்கா 2) எபேசு 3) கொரிந்து
   4) இக்கோனியா 5) பிலிப்பு

33. நெஸ்தோரிய பேதகத்திற்குத் தீர்வுக்கான உருவாக்கப்பட்ட சங்கம்.
   1) நிசேயா பொதுச்சங்கம் 2) ஜெருசலேம் பொதுச்சங்கம் 3) எபேசு பொதுச்சங்கம்
   4) கல்செடோன் பொதுச்சங்கம் 5) திருதெந்தின் பொதுச்சங்கம்

34. உரோமைக் கலாபனைக்கு முக்கியமான உரோமையரின் கொள்கை.
   1) உலக அரசு இறையரசைவிட மேலானது.
   2) கிறிஸ்தவர்கள் கொடியவர்களாக கருதப்பட்டமை.
   3) இறையரசு முடிவில்லாதது.
   4) உரோமையரின் வாழ்வு முக்கியமானது.
   5) கிறிஸ்தவர்களின் விசுவாசம்.

35. ஒருவர் தானும் தூய்மையடைந்து மற்றவரையும் தூய்மையாக்க வேண்டும் என்று இயேசுவால் பணிக்கப்பட்ட சம்பவமாக நிகழ்வது.
   1) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்.
   2) இறந்தவர்களை உயிர்ப்பித்த சமயத்தில்.
   3) சமாரிய பெண்ணுடன் உரையாடிய சமயத்தில்.
   4) பாடுகள் மரண வேளையில்.
   5) பாதங்கழுவிய சந்தர்ப்பத்தில்.

36. ஐரோப்பாவில் பவுலின் முதற்பணி இடம்பெற்ற மாநிலம்.
   1) மசதோனியா 2) அந்தியோக்கியா 3) பிலிப்பி 4) கொரிந்து 5) தெசலோனிக்கா

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

37. எட்டுப்பேறுகளின் முதல் மூன்று பேறுகளும் குறித்து நிற்கும் கருத்து.
    1) இறைவனோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை.
    2) சக மனிதரோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை.
    3) இறைமனிதரோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை.
    4) சமூகத்தோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை.
    5) திருச்சபையோடு நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலை.

38. மிஸ்னா என்னும் நூலில் உள்ளடக்கப்படாதது எது?
    1) குற்றவாளி தொடர்பாக இரண்டு சாட்சிகள் தனித்தனியே விசாரிக்கப்பட வேண்டும்.
    2) மரண தண்டனைத் தீர்ப்பாயின் இரு நாட்களின் பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்.
    3) குற்றம் சாட்டப்பட்டவரின் வாய் மூலத்தை வைத்து தீர்ப்பிடக்கூடாது.
    4) திருவிழாக்காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு வேளைகளில் கூட்டப்பட வேண்டும்.
    5) ஆலயத்தில் அதற்காக அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்.

39. பொதுச்சங்கங்களும் அவற்றில் விவாதிக்கப்பட்ட பேதங்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான சோடியை இனங்காண்க.
    1) எபேசு பொதுச்சங்கம் - நெஸ்தோரிய பேதகம்.
    2) நிசேயா பொதுச்சங்கம் - இயுத்திக்கேய பேதகம்.
    3) எருசலேம் பொதுச்சங்கம் - பெலாஜிய பேதகம்.
    4) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம் - ஆரிய பேதகம்.
    5) கல்செடோன் பொதுச்சங்கம் - மசதோனிய பேதகம்.

40. மலைப்பொழிவில் இயேசுவினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று யூத நடைமுறைகளாவன.
    1) தருமம், இறைவேண்டல், நோன்பு
    2) இறைவேண்டல், நோன்பு. பரித்தியாகம்
    3) இறைவேண்டல், பரித்தியாகம், தருமம்
    4) நோன்பு, தவம், தருமம்
    5) தருமம், நோன்பு, பரித்தியாகம்

agaram.lk

41. ஐரோப்பிய பழங்குடி மரபினர் பற்றிய மேல்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    A – விவசாயத்திலும் மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டனர்.
    B – ஒவ்வொரு குலமும் ஓர் அரசனால் ஆளப்பட்டது.
    C – மக்கள் சுதந்திரமும் சுய மரியாதையும் கொண்டு விளங்கினர்.
    D – அதிகமான குலங்கள் இராணுவத்தை கொண்டிருந்தன.
    E – உயர்ந்த கல்வி நிலை காணப்பட்டது.

    இவற்றுள் சரியான கூற்றுக்களாவன.
    1) A, B, C    2) A, B, D    3) A, C, D    4) B, D, E    5) C, D, E

42. கீழ்வருவனவற்றுள் ஆசீர்வாதப்பர் துறவறத்தினரின் பண்பு அல்லாதது.
    1) செபமும் வேலையும்.
    2) விவிலியமும் இலத்தீன் மொழியும் இலக்கியமும் கற்பித்தமை.
    3) மடங்களை அண்மித்து பாடசாலைகளை நிறுவியமை.
    4) பழைய ஏடுகளை பிரதி எடுத்தமை.
    5) மடத்தின் ஒதுங்கிய சிறு அறைகளில் செபித்தமை.



agaram.lk

www.agaram.lk

43. இரவலர் சபைகள் பற்றிய கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – நற்செய்தி கூறும் ஏழ்மையை திருச்சபைக்குள் மீண்டும் ஏற்படுத்துதல்.

B – சிலுவைப்போர் காரணமாக ஆன்மீக செயற்பாடுகளில் கவனம் செலுத்தப்படாமை.

C – ஐரோப்பாவின் செல்வச் செழிப்பால் திருச்சபையில் ஏற்பட்ட உலகியல் போக்கு.

D – மக்கள் புதிய துறவற சபைகளின் உருவாக்கத்தை விரும்பியமை.

E – அக்காலத்தில் துறவற சபைகள் பழக்கப்பட்டிருந்தமை.

இவற்றுள் இரவலர் சபைகளின் தோற்றத்திற்கான காரணங்களைக் கொண்ட கூற்றுக்கள்.

1) A, B, C 2) A, C, E 3) B, C, D 4) B, D, E 5) C, D, E

44. பிரான்சிஸ்கன் சபை துறவிகளின் வாழ்க்கையுடன் தொடர்பு அற்றது.

1) எளிமையான வாழ்க்கை முறை
2) தனிச்சொத்துக்கு உரிமை கோராமை
3) இரந்து அன்றாட உணவைத் தேடுதல்
4) விவசாய பண்ணைகளை நிருவகித்தல்
5) நற்செய்தி ஏழ்மையை வாழ்தல்

45. பின்வருவனவற்றுள் இரவலர் துறவறசபை அல்லாதவை.

A – வின்சென்சியன் B – வல்தேசியன் C – டொமினிக்கன்

D – பிரான்சிஸ்கன் E – குளுணி

1) D, C 2) A, E 3) B, C 4) A மட்டும் 5) D மட்டும்

46. பின்வருவனவற்றுள் புனித பெனடிக்ற் பற்றிய பிழையான கூற்று எது?

1) இத்தாலியின் நூர்சியா என்னுமிடத்திலுள்ள பிரபுக்குடும்பத்தில் பிறந்தார்.
2) துறவிகளுக்கான ஒழுங்கு நூலை எழுதினார்.
3) இயற்றப்பட்ட ஒழுங்கு நூல், துறவியர் கிறிஸ்து மைய வாழ்வு வாழ உதவியது.
4) மொன்தே கசினோ என்னுமிடத்தில் முதல் துறவு மடத்தை நிறுவினார்.
5) அவரால் உருவாக்கப்பட்ட துறவறசபையின் விருதுவாக்கு "செபமும் கல்வியும்" ஆகும்.

47. எபேசில் பொதுச்சங்கம் கூடி நெஸ்தோரிய தப்பறையை கண்டித்த காலம்.

1) கி.பி 325 2) கி.பி 431 3) கி.பி 451 4) கி.பி 410 5) கி.பி 318

48. கப்பத்தோசியப் பிதாக்களைக் கொண்ட விடைத்தொகுதி.

1) புனித அத்தனாசியுஸ், புனித பக்கோமியுஸ், புனித பசில்.
2) புனித அம்புறோசியார், புனித சிறில், புனித ஆசீர்வாதப்பர்.
3) புனித மாட்டின், புனித இரெனியுஸ், புனித கிரகோரி.
4) புனித பசில், புனித கிரகோரி நாசியன்ஸ், புனித கிரகோரி நிஸ்ஸா.
5) புனித கசியன், புனித அத்தனாசியுஸ், புனித அகுஸ்தீனார்.

49. கூற்று – தேர்ததூலியன் இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
காரணம் - அதிக அளவில் இலத்தீன் மொழியில் கிறிஸ்தவ ஆக்கங்களை எழுதியமையால் ஆகும்.

1) கூற்று தவறு காரணம் சரி
2) கூற்றும் காரணமும் தவறு
3) கூற்றும் காரணமம் சரி
4) கூற்றும் சரி காரணம் தவறு
5) கூற்று சரி காரணம் பற்றி முடிவு கூற முடியாது

50. மறை பரப்பாளர் புனித கொலம்பாவுடன் தொடர்புடைய கூற்றுக்கள்.

A – ஸ்கொட்லாந்தின் திருத்தூதர்.

B – அரசர் எத்தல்பரட்டின் ஆதரவைப் பெற்றார்.

C – டெரி துறவியர் மடம் இவரது மடங்களுள் சிறந்தது.

D – ஜேர்மனியர் பலரின் மனமாற்றத்திற்கு உதவினார்.

E – சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டார்.

1) A, C 2) B, C 3) C, D 4) D, E 5) B, D



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2021) | 49 T II |

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

1) i) கிறிஸ்தவ நாகரிகத்தில் உரோம நாகரிகம் ஏற்படுத்திய தாக்கம் 4 தருக?

(2 புள்ளிகள்)

ii) இஸ்ரயேல் மக்களை கி.மு 1000 – கி.மு 922 வரை ஆட்சி செய்த இரண்டு அரசர்கள் இருவரின் ஆட்சிச் சிறப்பை சுருக்கமாக விபரிக்குக.

(4 புள்ளிகள்)

iii) இயேசுவின் காலத்தில் வரிதண்டுவோர் பாவிகள் என ஒதுக்கப்பட்டமைக்கான காரணங்களை விபரிக்குக.

(6 புள்ளிகள்)

iv) யூத மக்களின் வாழ்வில் தலைமைக்குருக்கள் பெற்றிருந்த செல்வாக்கு குறித்துக் கலந்துரையாடுக?

(8 புள்ளிகள்)

2) i) யூதர்களின் முக்கிய திருவிழாக்கள் 4 தருக.

(2 புள்ளிகள்)

ii) இயேசுவின் புதுமைகளின் 4 வகைகளையும் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) இயேசுவின் மலைப்பொழிவின் முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

iv) இறையாட்சியின் அடையாளமான புதுமைகள் இயேசு செய்தமைக்கான காரணங்களை சுருக்கமாக விபரிக்குக.

(8 புள்ளிகள்)

3) i) இயேசுவின் காலத்தில் உடல் தூய்மை இல்லாதவர்களாக கருதப்பட்ட 4 குழுவினரைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ii) சீடத்துவம் பற்றிய இயேசுவின் படிப்பினைகளை மாற்கு நற்செய்தியின் படி சுருக்கமாக விபரிக்க?

(4 புள்ளிகள்)

iii) "பாதம் கழுவுதல்" குறித்த இயேசுவின் போதனையை விளக்குக?

(6 புள்ளிகள்)

iv) "புனித பவுல் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சவால்களை வெற்றிகொண்டு அவற்றை முன்மாதிரியாக்கினார்" விளக்குக.

(8 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

## பகுதி II

4) i) கி.பி 1054 இல் திருச்சபை மேற்கு கிழக்கு என இரண்டாம் பிரிந்தமைக்கு வழிகோலிய தலைமைத்துவ மறைகோட்பாட்டு காரணிகளை விளக்குக?

ii) இன்றைய சமூகத்திற்கு "ஒன்றிப்பு" பற்றிய இயேசுவின் படிப்பினைகள் எவ்வாறு பொருத்தப்பாடாயுள்ளன என்பது பற்றி கருத்துரை வழங்குக?

(10x2=20 புள்ளிகள்)

5) i) உரோமைக்கலாபனை ஏற்பட்டமைக்கான காரணங்களை விளக்குக.

ii) இன்று எமது சமூகத்தில் கிறிஸ்தவ வாழ்விற்கான தடைகளை தகர்த்து நிறைவான கிறிஸ்தவ வாழ்வு வாழ எவ்வாறு சான்று பகர்வீர்?

(10x2=20 புள்ளிகள்)

6) i) துறவறவாழ்க்கை முறைகள் கிறிஸ்தவத்தின் மறுமலர்ச்சிக்கு எவ்வாறு பெருந்துணையாக விளங்கின என்பது பற்றி கலந்துரையாடுக.

ii) திருச்சபை வரலாற்றில் இன்றைய இளஞர்கள் யுவதிகள் துறவறவாழ்வில் தம்மை ஈடுபடுத்த முன்வராமைக்கான காரணங்களை பற்றி ஆராய்க?

(10x2=20 புள்ளிகள்)

7) i) கி.பி முதலாம் நூற்றாண்டில் மத்திய தரைக்கடலைச் சூழ்ந்த நாடுகளில் கிறிஸ்தவத்தை பரப்ப பவுல் மேற்கொண்ட பயணங்களைப் பற்றி குறிப்புரைக்க?

ii) இன்றை கொவிட் - 19 காலப்பகுதியில் நற்செய்தியை பரப்பி கிறிஸ்துவிற்கு சான்று பகர கிறிஸ்தவ மாணவராகிய நீர் யாது செய்வீர் என விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

8) i) கிறிஸ்தவ சகோதரத்துவம் பற்றி தூய பவுல் தரும் படிப்பினைகளை விளக்குக?

ii) வன்முறைகள் அதிகரித்த இக்காலத்தில் உண்மையான சகோதரத்துவத்தைப் பேண பின்பற்றக்கூடிய விடயங்களை விளக்குக?

(10x2=20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk